பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6:00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 22 செவ்வாய்க்கிழமை (05-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 100

# தீர்வுத் திட்டத்தை எதிர்த்து பிக்குகள் கொழும்பில் கூட்டம்

## இன்று பதற்றம் உருவாகும் அபாயம்

கொழும்பு, மார்ச் 5

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத் திட்டத்தை எதிர்த்து பௌத்த பிக்குமார் இன்று நடத்தும் மாபெரும் கூட்டத்தினால் கொழும்பில் இன்று பதற்ற நிலை உருவாகலாம் என அஞ்சப்படுகிறது.

நான்கு பிரதம நிக்காயாக்களையும் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பிக்குமார் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது;

கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிக்குமாரை, பொலீஸார் சோதனைக்கு உட்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுவதால் —

இன்று கொழும்பில் பதற்ற நிலை தோன்றக் கூடும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக கூட்ட அமைப்பாளர் அச்சம் தெரிவித்தார்.

மல்வத்தை, அஸ்கிரிய, அமரபுர, ராமாண்ய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களின் அனுசரணையுடன் தீர்வுத் திட்டத்துக்கு எதிரான கூட்டம் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பண்டாரநாயக்கா "சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எங்களின் எதிர்ப்பை மழுங்கடிப்பதற்காக அரசாங்கம் பொலீஸாரைக் கொண்டு கூட்டத்துக்கு வரும் பிக்குகளைச் சோதனையிடலாம்.

அதனால் நகரில் பதற்ற நிலை உருவாகும் ஆபத்து உண்டு.

எங்களைச் சோதிப்பதற்கு ஏதுவாகவே, விடுதலைப் புலிகள் பிக்கு வேடத்தில் நடமாடுகிறார்கள் என்று அரசு பிரசாரம் செய்துவருகிறது — என்று கூட்ட அமைப்பாளர் பேராசிரியர் ஹெட்டியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் சிப்பாய் பலி

புல்மோட்டையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் படுகாயமடைந்தார்.

புல்மோட்டை — அனுராதபுரம் வீதியில் 14ஆவது மைல் கல்லில் வியாழனன்று ரோந்து சென்று கொண்டிருந்தபோது இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். (இ-3)

## வலிகாமத்தில் புலிகள் பெருந்தாக்குதல் முஸ்தீவு

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, மார்ச் 5

வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது, விடுதலைப்புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் தயாராகி வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக ''சண்டே லீடர்'' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் கூறுகிறார்.

இராணுவம் ஆக்கிரமித்துள்ள வலிகாமம் பிரதேசத்திற்குள் பெரும் எண்ணிக்கையான விடுதலைப்புலிப் போராளிகள் உட் சென்றுள்ளதாகவும் —

இவர்கள் யாழ்ப்பாண நகரத்தின் மீது பெருந்தாக்குதலை நடத்துவதற்குத் தருணம் பார்த்திருப்பதாகவும் — பாதுகாப்புப் படையினருக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் — அந்தச் செய்தியாளர் எழுதுகிறார்.

வலிகாமத்திற்குள் ஊடுருவி உள்ள விடுதலைப்புலிகள் அங்குள்ள மக்களோடு மக்களாகச் சேர்ந்து நடமாடுவதாகவும் தகவல்கள் கிடைத்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## படையினர் 2 ஆம் நாளாக நேற்றும் ஷெல் தாக்குதல்

சாவகச்சேரி, மார்ச் 5

வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று இரண்டாவது தினமாக தென்மராட்சிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். நேற்று அதிகாலை 4.00 மணி அளவில் மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்குப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

நேற்று முன்தினம் நாவற்குழிப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஏழு பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

நேற்று அதிகாலை வீசப்பட்ட ஷெல்களில் ஒன்று மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாக பிரதான வீதியில் வீழ்ந்து வெடித்தது.

மற்றைய ஷெல் மட்டுவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் புலிகளைத் தேடி மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாம்

யாழ்ப்பாணத்தில் மறைந்திருக்கும் விடுதலைப் புலிகளை தேடி மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக வடபகுதி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதாக இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

கடந்த முதலாம் திகதி முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

சில இடங்களில் விடுதலைப் புலிகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகவும் — மேலும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளை முழுமையாக கட்டுப்படுத்தி வழமையான வாழ்க்கை சூழ்நிலையை மக்களுக்கு வழங்குவதே படையினரினதும், அரசாங்கத்தினதும் நோக்கம் என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## முகத்துவாரம் பகுதியில் குண்டுகள் கண்டுபிடிப்பு!

கொழும்பு, மார்ச் 5

முகத்துவாரம் பொலிஸார் பெருந்தொகையான குண்டுகளை கண்டுபிடித்துள்ளனர்.

முகத்துவாரம் பாம் வீதியில் உள்ள கழிவு நீர் செல்லும் வடிகாலில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டன

குறித்த நேரத்தில் வெடிக்கக்கூடிய 7 குண்டுகள், 4 கைக் குண்டுகள், குண்டுகளை தானாகவே வெடிக்கச் செய்யும் 7 கருவிகள் ஆகியனவையும் இவற்றுள் அடங்கும்.

இந்தக் குண்டுகள் பை ஒன்றில் போடப்பட்டு றோமன் கத்தோலிக்க நிறுவனம் ஒன்றுக்கு எதிரேயுள்ள கால்வாயில் வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

நேற்றுக்காலை 7.10 மணியளவில் சந்தேகத்துக்குரிய பாசல் ஒன்றை ஒருவர் கண்டெடுத்துள்ளதாக தொலைபேசி மூலம் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் வந்து குண்டுகள் அடங்கிய பையைக் கைப்பற்றினர்.

இந்தக் குண்டுகளை பின்னர் இராணுவத்தினர் செயலிழக்கச் செய்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கிளிநொச்சியிலிருந்து வெளியேறும்?

கொழும்பு, மார்ச் 5

வானொலித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது விட்டால் கிளிநொச்சியில் இருந்து வெளியேற நேரிடும் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அரசுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

''வானொலித் தொடர்பு இன்றி வடக்கில் செயற்படும் போது எதிர்நோக்கப்படும் அசௌகரியங்கள் பற்றி அரசுக்கு எடுத்துக்கூறி வானொலித் தொடர்பை ஏற்படுத்த உதவுமாறு கோரியுள்ளோம். ஆனால் அரசிடம் இருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை, அரசு அனுமதி வழங்கமறுத்தால் நாம் கிளிநொச்சியிலிருந்து வெளியேறுவோம் என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரக சிரேஷ்ட திட்ட அதிகாரியான பீற்றர் மெய்யர் றொய்ட்டருக்கு தெரிவித்தார். (இ 3)

## ஜி.சீ.ஈ. மற்றும் ஆண்டு 5 பரீட்சைகள் மே மாதம் நடத்துவதற்கு முயற்சி

கிளிநொச்சி, மார்ச் 5

வடபகுதி மாணவர்களுக்கான — 1995 ஆம் ஆண்டுக்குரிய — விசேட ஜி. சீ. ஈ. (சாதாரணதர) மற்றும் ஆண்டு ஐந்துக்கான புலமைப் பரிசில் பரீட்சைகளை மே மாதம் இறுதி வாரத்தில் நடத்துவதற்கான முயற்சிகளை அந்தந்தப் பிரிவு கல்விப் பணிப்பாளர்கள் எடுக்க வேண்டும்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு பேரவைத் தலைவர் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இட்டமிட்டவாறு எதிர்வரும் 11 ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுப்பது.

★ இதற்கு வசதியாக தற்போது பாடசாலைகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பகுதியில் 3 படையினர் காயம்

பாதுகாப்புப் படையினர் நேற்றுக்காலை மன்னாரில் உள்ள வட்டக்கண்டலில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இதில் 3 படையினர் காயமடைந்தனர். இவர்களில் இருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

ஜெனரேட்டர் விற்பனை

யன்மார் (Yanmar Diesel) 2000W. (240V), றொபின் (Robin) 28 00W. (240V) ஹொண்டா (Honda) 1500W (110-220V), பற்றறி 200A.M. (Lucas 12V). தொடர்பு கொள்ளும் முகவரி: செ. மகேஸ்வரன், சரசாலை வடக்கு, சரசாலை. (40881)

சோதிடம்

கல்வி, பிரயாணம், தொழில், திருமணம், வழக்கு வெற்றி, அதிர்ஷ்ட ஜெனன ஜாதகக் குறிப்பு பலாபலன் சோதிடர்- சிவா, நல்லூர். தொடர்பு: சிவகந்தசாமி ஆச்சாரி, ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (40962)

ENGLISH ஆங்கிலம் 96

Distinction, Credit O/L பெறுபேறடைய துரித மீட்டல். Spoken English பிற மாணவர்களுக்கும் கற்பிப்பார். ஆசிரியர் B.Sc (Cey), Lond. Inter மே/பா. சரவணமுத்து, கமலாச்சி வேதவனம் பிள்ளையார் ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி. (40905)


## ல. ச. ச. கட்சி கம்யூ. கட்சி இணையும்

கொழும்பு, மார்ச் 5

இலங்கையின் பழம்பெரும் அரசியல் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைவதற்கான பேச்சுவார்த்தை இந்த வருட இறுதிக்குள் நடைபெறும் என லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார். (இ)

## கஞ்சா விற்றவர் கைதானார்

தென்மராட்சி, மார்ச் 5

சங்கத்தானை முருகன் கோயிலுக்கு அருகாமையில் 700 கிறாம் கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த நபர் ஒருவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கஞ்சாவும் மீட்க்கப்பட்டது.

சட்ட நடவடிக்கைக்காக இவர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-117)

## பளையில் வாரம்3தினங்கள் பற்சிகிச்சை

தென்மராட்சி, மார்ச் 5

பளை அரச வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமைகளில் மட்டும் நடைபெற்று வந்த பற்சிகிச்சைப் பிரிவு இம் மாதம் தொடக்கம் வாரத்தில் மூன்று தினங்கள் நடத்தப்படுகிறது.

வாரத்தில் ஒரு நாள் பற்சிகிச்சை நடத்தப்படுவதால் பளைப் பகுதியிலிருந்து பெருமளவு நோயாளர்கள் பற்சிகிச்சைக்காக சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு வருகின்றனர் என்றும் — சிகிச்சை தினங்களை அதிகரிப்பதன் மூலம் சாவகச்சேரி வரும் நோயாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, சாவகச்சேரி வைத்தியசாலை இடநெருக்கடியைக் குறைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-117)


## வலிமேற்கு பிரதேச வணிகர் கழகம் முக்கிய அறிவித்தல்

மேற்படி கழகத்தின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களை நாளை 06 - 03 - 1996 புதன்கிழமை காலை 10 மணியளவில் கொடிகாமம் வட்டச் செயலகத்தில் ஒன்று கூடும்படியும் கழகத்தின் மரண சகாய நிதி பெறத்தவறியவர்கள் அதற்குரிய ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி

தலைவர்,
வலி-மேற்கு வணிகர் கழகம்,
சங்கானை.

(40971)

## உங்கள் நலன் கருதி எங்கள் புதிய தொடர்பகம்.....

## கே.எஸ்.ஆர். போட்டோஸ்

(ஒளிப்படக் கலையகம், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்)

### வீடியோ, புகைப்படச் சேவை

இல. 9, ]ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி.

கணேசமணி ஆசிரியர், நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

(40470)

## யாழ். மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் கவனத்திற்கு

1995/96 காலபோகத்தில் ஈரலிப்பான வயல்களையோ, அல்லது நீர் இறைத்து பயிர் செய்யக்கூடிய வயல்களையோ தரிசாக விடாது பயிர்ச் செய்கைக்கு உட்படுத்து முகமாக சிறுதானிய விதைப்பிற்குத் தேவையான பயறு, உழுந்து, எள்ளு, கௌபி போன்ற விதையினங்கள் பசுமை வேளாண் சேவை ஊடாகவும், கமநலசேவை நிலையங்கள் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எனவே விதையினங்கள் தேவையான விவசாயிகள் மேற்படி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப் பயிர் உற்பத்தியில் உடன் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(40903)

## "ஒக்ஸ்பாம்" (OXFAM) பதவி வெற்றிடம்

### சமூக நலத்துறை உத்தியோகத்தரின் உதவியாளர்

இப்பதவியாளர் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் சமூக நலத்துறை உத்தியோகத்தருக்கு உதவுபவராக இருப்பார்.

**தகைமைகள்:**

— பால் - பெண்
— சமூகநலத்துறையில் ஆர்வமுடையவர்.
— சமூகநலத்துறை உத்தியோகத்தருக்கு மொழி பெயர்ப்பாளராக செயற்படும் வல்லமை.
— ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் போதிய அறிவு.
— வன்னிப் பிரதேசத்தைப் பற்றியும், மக்களைப் பற்றியும் நன்கு அறிந்திருத்தல்.
— அரச சாரா நிறுவனத்தில் கடமையாற்றுவதில் ஆர்வம்.
— தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவர்.
— நீண்ட நேரம் வெளிக்கள வேலையில் ஈடுபடத் தயாராக இருத்தல்.

சகல விவரங்களையும் கொண்ட சொந்தக் கையெழுத்தில் ஆன விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்கப்படலாம்.

முகவரி:

வெளிக்கள இணைப்பாளர், "ஒக்ஸ்பாம்" கிளிநொச்சி.

★ விண்ணப்ப முடிவுத் திகதி: **10-03-1996**

★ நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு:

★ மேற்குறிப்பட்ட பதவி தற்காலிகமானது. ஆயினும் ஊ. சே. நிதி, ஊ. ந. நிதி என்பவற்றுடன் ஆனது.

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (40892)


## படையினர் கெடுபிடியால் கொழும்பில் தமிழர் பீதி!

### கிளிநொச்சி வந்த பெண் கூறுகிறார்

கிளிநொச்சி, மார்ச். 5

கொழும்பு நகரப் பகுதிகளில் அரச படையினரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து அங்குள்ள தமிழர் எந்நேரமும் ஒருவித பயப்பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

கொழும்பிலிருந்து கிளிநொச்சி வந்து சேர்ந்த 55வயதான திருமதி. லீலாவதி தங்கராஜா என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு நகரில் வீதிக்கு வீதி, இராணுவத்தினரின் கெடுபிடிகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. வயது வேறுபாடின்றி தமிழர்கள் விசாரணை என்ற பெயரில் கொதிக்கும்வெய்யிலில் நீண்டநேரம் தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

இளைஞர்கள், யுவதிகளை நீண்ட நேர விசாரணையின் பின், மேல் விசரணை என்கின்ற பெயரில் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர்.

இரவு வேளைகளில் வீடுகளில் புகும் இராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் மக்களைத் துன்புறுத்தி வருகிறார்கள்.

இச் சந்தர்ப்பங்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டும் வருகிறார்கள். படையினரின் இந்தவகையான கெடுபிடிகளினால் கொழும்பு வீதிகளில் தமிழ் மக்களின் நடமாட்டம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது.

தமிழ் மக்களைப் பயமுறுத்தி பணம் பறிக்கும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

மொத்தத்தில் கொழும்பு நகரில் தமிழ் மக்கள் எந்நேரமும் ஒரு வகையான அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-124)

## மலேரியா பரிசோதனைக்கு உகந்த மருந்து இல்லை

மலேரியாக் காய்ச்சல் பரவி வரும் இவ்வேளையில், இந் நோயைக் கண்டறிவதற்கான வசதிகள் வைத்தியசாலைகளிலோ அல்லது மலேரியா தடுப்புப் பிரிவிலோ இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஜனவரியில் இருந்து, மலேரியாவைக் கண்டறிவதற்கான இரத்தம் பரிசோதிக்கும் மருந்து முடிவடைந்துள்ளது. மந்திகை ஆஸ்பத்திரியில் இந்த மருந்துக்கு பதிலாக வேறு ஒரு மருந்தைப் பாவித்த போதிலும், உரிய பலனை பெற முடியாதுள்ளதாக ஆய்வு கூட வட்டாரத்தில் இருந்து தெரியவருகிறது.

இந்த மருந்து முடிவுற்றதை அடுத்து யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனை கொழும்பு மலேரியா தடுப்புப்பிரிவு தலைமையகத்துடன் பலதடவை தொடர்பு கொண்டும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே உள்ளதாக மலேரியா தடுப்புப் பிரிவு உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)


## 'மூதறிஞர்' சி. சிவஞானசுந்தரம் அவர்களின் மறைவுக்காய்

## கம்பன் கழகத்தாய் கண்ணீர் வடிக்கின்றாள்

சிந்தனைக்கோர் 'சுந்தர்' எனும்
'சிரித்திரனே!' மண்ணுலகின்
வந்தனைக்கு உரிய பெரும்
வரலாற்றுக் கலைமகனே!
அங்கதஞ்சேர் ஓவியத்து
அறிஞனென வீற்றிருந்தே
'செங்கரங்கள்' துணையொடு நீ
சிலிர்த்திருந்த அக்காலச்
சங்கதிகள் கலையுலகச்
சரித்திரத்தை அலங்கரிக்கும்
மங்கலஞ்சேர் அணிகலனாய்
மண்ணுலகில் நிலைத்திருக்கும்.

அகில இலங்கைக் கம்பன் கழகம்
திருகோணமலைக் கம்பன் கழகம்
காரைநகர்க் கம்பன் கழகம்
ஊரெழுக் கம்பன் கழகம்
வடமராட்சிக் கம்பன் கழகம்
கொழும்புக் கம்பன் கழகம்.

(சி/4084)

## கிளிநொச்சியில் பாரத் ஸ்ரூடியோ

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிய பிரசித்திபெற்ற பாரத் ஸ்ரூடியோ தற்போது புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சியில் இயங்குகிறது.

★ அவசர பாஸ்போர்ட் படங்கள்
★ தேசிய அடையாள அட்டைப் படங்கள்
★ படத்தை "என்லார்ஜ்" (பெரிதாக்குதல்) செய்ய —
★ மங்கள நிகழ்ச்சிகளை கலர் படம் எடுக்க —

நீங்கள் நாட வேண்டிய இடம்:

பாரத் ஸ்ரூடியோ
புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி.

(சி-4083)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசுக்கு அச்சம் எதற்கு?

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்க வேண்டுமானால், மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் ஓர் அடிப்படைத் தேவையாகும் —

இருதரப்புகளுக்கும் இடையில் முன்னர் பேச்சுக்கள் நடந்த போது, அரசாங்கம் தமக்குத் தீர்விலும், சமாதானத்திலும் அக்கறையும் ஆர்வமும் உள்ளதாகப் பிரசாரம் செய்ததே அன்றி, அவற்றை நாடி விசுவாசமாகவோ நேர்மையாகவோ செயற்படவில்லை—

ஆகையினால் இனிமேல் பேச்சுவார்த்தை எதுவும் நடப்பதானால் மூன்றாம் தரப்பிலிருந்து மத்தியஸ்தம் அவசியம்—

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக லண்டனில் உள்ள வானொலி நிலையம் ஒன்று நடத்திய கருத்தரங்கில் — விவாதத்தில் — கலந்து கொண்டு பேசிய ரூபவாஹினியின் முன்னாள் தலைவர் திரு. வசந்தராஜாவே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலிலும், நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கு முன்னர்— ஆட்சிக் கதிரையில் ஏறி அமர்வதற்கு முன்னர்—இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைச் சமாதான வழியில் காணவேண்டும் என்பதில் சந்திரிகா ஆர்வமாக நேர்மையாக உள்ளார் என்று நம்பிய அவரது நெருங்கிய ஆதரவாளராகவும் அபிமானியாகவும் விளங்கியவர்களில் வசந்தராஜாவும் ஒருவர்.

சந்திரிகாவின் ஆரம்ப கால உள்ளக ஆலோசனையாளர் வட்டத்துச் சகாக்களில் ஒருவராகவும் விளங்கியவர் அவர். எனவே விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை எவ்வாறு சந்திரிகா குழப்பினார், முறித்துக் கொண்டார் என்பதனை ''உள்ளாடும் கள்ளாடுமாக'' நன்றாகத் தெரிந்துகொண்டவர் வரதராஜா.

போரின் மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி, தமிழர்களின் நியாயமான உரிமைகளைப் புறக்கணிக்கும் ஒரு தீர்வைத் தமிழர் மீது திணிக்கவேண்டும் என்ற வழமையான பேரினவாத அரசியலுக்கு ஆட்பட்டவர் சந்திரிகா என்பதனை வசந்தராஜா இப்போது வெளியிடும் தகவல்கள் அம்பலப்படுத்துகின்றன; உறுதிசெய்கின்றன.

மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டால், தமிழர்கள் மீது தீர்வைத் திணிப்பது, அவர்களுக்குரிய உரிமைகளை மறுப்பது என்பது இயலாத காரியமாகிவிடும். தமது உள்நோக்கம் வெளி உலகத்துக்குத் தெரிந்துவிடும். இனப்பிரச்சினை சர்வதேச மயப்பட்டுவிடும். தனது கையை மீறி வெளியாரிடம் போய்விடும் என்ற அச்சத்தினாலேயே சிங்களத் தலைவர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்து வருகிறார்கள். சந்திரிகாவும் அதே வழியில் செலகிறார். மத்தியஸ்தத்துக்கு அஞ்சுகிறார்.

தமிழர் இனப்பிரச்சினை இனிமேல் வெறும் உள்விவகாரமாக இருக்கப்போவதில்லை. அந்த நிலையை அது கடந்துவிட்டது. சிங்களத் தலைவர்களின் கபடத்தனமே அந்நிலையையும் உருவாக்கியது. இனிமேலும் அவர்கள் இதனைத் தமது கைக்குள் பிடித்து வைத்து காலம் போக்கி, காலம் வாங்கி அரசியல் நடத்த இயலாது.

# கிழக்கில் அகோர ஷெல் தாக்குதல்; நூற்றுக்கணக்கானோர் இடம்பெயர்வு

மட்டக்களப்பு, மார்ச் 5

கிழக்கில் இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக கொடுவாமடு, தம்பானம் வெளி, மயில வெட்டுவான், பூமாச் சோலைப் பகுதிகளில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்புத் தேடி வேப்ப வட்டுவானுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி — பதுளை வீதியில் கடந்த வெள்ளியன்று இந்த ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

செங்கலடியில் இருந்து சுமார் 10மைல் தொலைவில் உள்ள கொடுவாமடு வயல் பிரதேசத்துக்கு படையினர் எந்த வித எதிர்ப்பும் இன்றி முன்னேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் கடுமையான ஷெல் தாக்குதல்களை நடத்திக் கொண்டு முன்னேறி உள்ளனர். சனிக்கிழமை விமானத்தாகுதல்களும் அப் பகுயில் இடம் பெற்றன.

தற்போது இராணுவ நடவடிக்கை இடம் பெறுகின்ற பிரதேசங்களில் நெல் அறுவடை காலமாகையால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நெல் அறுவடைக்காகச் சென்ற விவசாயிகள் ராணுவ நடவடிக்கை காரணமாக திரும்பி வர முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### வாளி மலசல கூடத்துக்கு பதிலாக

## நீரடைப்பு மலசல கூடம் அமைப்பதற்கு நடவடிக்கை

அல்வாய், மார்ச் 5

பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வாளி மலசல கூடங்களை நீரடைப்பு மலசல கூடங்களாக மாற்றும் நடவடிக்கையை நகர சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

இத்திட்டத்தின் அடிப்படையில் சுமார் 300 வாளி மலசல கூடங்கள் நீரடைப்பு மலசல கூடங்களாக மாற்றி அமைக்கப்பட உள்ளன.

வாளி மலசல கூடங்களினால் பரவும் தொற்று நோய்களை தடுக்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்த பருத்தித்துறை நகரசபை செயலாளர் திரு. கே. சண்முகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டத்துக்கு, மலசல கூடங்களை அமைப்பதற்கு வேண்டிய கோப்பைகளை வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன்வந்துள்ளது.

(இ-152)

### பாதுகாப்பு

நாளை கண்டி அஸ்கிரிய சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா — கென்யா அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கண்டியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

அங்கு ஆயிரத்து 500பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

பொலீஸ் காவல் நிலையம் ஒன்றும் விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ளது.

## இரவில் வந்து ஆஸ்பத்திரியில் தங்கத் தடை

நடத்தப்படும் கிளினிக்களுக்கான இலக்கத் துண்டுகள் காலை 7மணி முதல் வழங்கப்படும் எனவும் —

நோயாளர்கள் தமக்குவழங்கப்பட்டுள்ள சிகிச்சைக் கார்ட்டைச் சமர்ப்பித்து இலக்கத் துண்டைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கத் துண்டு பெறுவதற்காக முதல் நாள் இரவு ஆஸ்பத்திரி வளவில் உள்ள கட்டடங்களில் நோயாளர் தங்குவது தடை செய்யப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தர் டாக்டர் செல்வி உ. சிவபாதசுந்தரம் தெரிவித்தார். (இ-173)

## ஊசி மருந்தை பாதுகாக்க முடியாத நிலை

தாளையடி, மார்ச் 5

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில், குளிரூசாதனப் பெட்டி இல்லாததால் ஊசி மருந்துகளை பாதுகாக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

'கிளினிக்' நடைபெறும் நாட்களில் மந்திகையிலிருந்து ஊசி மருந்து கொண்டு வரப்பட்டு ஏற்றப்படுகின்றது.

(இ-144)

# 2 பிரதான கட்சிகளின் நிலைப்பாடு; மிதவாத தமிழ் கட்சிகள் விசனம்

கொழும்பு, மார்ச் 5

தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்துக்கள், பல காலங்களாக பெரும் அவலங்களுக்குள்ளாகி வரும் தமிழ் மக்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்கக் கூடிய வகையிலான அரசியல் தீர்வை காண்பதற்கான சாத்தியப்பாடுகளை இல்லாமல் செய்யும் அறிகுறிகளை கொண்டுள்ளன.

இவ்வாறு மிதவாதத் தமிழ்க் கட்சிகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அரசியல் தீர்வு முயற்சிகளை இந்த விடயம் பாதிக்கும் என்றும் இந்தக் கட்சிகள் தெரிவித்தன.

(இ-3)

## கண் சிகிச்சைப் பிரிவு மெ. மி. பாடசாலைக்கு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்று வந்த கண்சிகிச்சைப் பிரிவு வெள்ளிக்கிழமை முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனால் வெள்ளியன்று சிசிச்சைக்கு (கிளினிக்) வந்த கண் நோயாளர்கள் சிரமமடைந்தனர்.

வைத்தியசாலையில் இலக்கத் துண்டுகளைப் பெற்றுக் கொண்டு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்குச் செல்லவேண்டியதாயிற்று.

இதுவரை காலமும் கண் சிகிச்சைப் பிரிவு மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவிலும், கண் சத்திரசிகிச்சைப் பிரிவு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் நடத்தப்பட்டு வந்தன.

ஆயினும் வெள்ளிக்கிழமை முதல் சிகிச்சைப் பிரிவும், கண் சத்திரசிகிச்சை நடைபெற்றுவரும் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

(இ-15-173)

## படைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் அரசு

### இதனாலே அடுத்த தாக்குதல் தாமதம்

கொழும்பு, மார்ச் 5

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர், படையினர் தரப்பில் பெரிய அளவிலான தாக்குதல் எதுவும் ஆரம்பிக்கப் படாமல் இருப்பதற்கு —

படைகளைப் பலப்படுத்தும் ஏற்பாடுகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருப்பதே காரணம் — என்று

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

படைகளின் ஆளணியை அதிகரிப்பதற்கும், ஆயுத மற்றும் போர்த் தளபாடங்களை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்வதற்கும், அரசாங்கம் இந்த இடைவெளியைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வதாக அவர் தமது கட்டுரையில் எழுதியுள்ளார்.

ஸ்ரீலங்கா கடற்படை தனது கலங்களில் பலவற்றை இழந்துவிட்டதால், அதிவேக ரோந்துப் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதன்பொருட்டு கடந்த வாரத்தில் பல கோடி ரூபாவுக்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ''டோறா'' அதிவேகப் படகுகளை வழங்குவதற்கு இஸ்ரேல் விருப்பம் தெரிவித்திருந்தபோதிலும் இம்முறை மேற்கு நாடு ஒன்றிடமே படகுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன — என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

## அனாதரவாக கிடந்த சிசு

வரணிப்பகுதியில் அனாதரவாகக் கிடக்கக்காணப்பட்ட ஒரு நாள் நிரம்பிய ஆண் சிசு பொதுமக்களால் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வரணிப் பகுதியில் வாழைத் தோட்டச்சந்தி ஒழுங்கை ஒன்றில் நேற்று மாலை காணப்பட்ட பை ஒன்றைப்பரிசோதித்த போதே அதற்குள் சிசு இருக்கக் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 6ஆம் திகதி காலை 10–00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ மயில்வாகனம் கணேசராசா — இல. 26, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை.

★ ரஞ்சினி பாலசுப்பிரமணியம் — நாவற்காடு, வரணி.

★ பண்டாரி வேலுப்பிள்ளை — மே/பா குமரகுருநாதன், காந்தன்குளம் வீதி, மீசாலை வடக்கு.

★ வைத்தீஸ்வரன் விக்னேஸ்வரன் — பருத்தித்துறை வீதி, இடைக்குறிச்சி, வரணி.

★ ராஜகுமாரசாமி சுதர்சன் — மே/பா ம. குகதாசன், வாசுகி மண் ரவில் அம்மன் கோவில், மீசாலை மேற்கு.

★ கந்தையா விஜயதேவி — தாவாளை, இயற்றாளை, கொடிகாமம்.

★ கௌரியம்மா செல்வதாஸ்— மே/பா உடையார் திருநாவுக்கரசு, இல. 28, சங்கத்தானை.

★ பூதத்தம்பி தயாபரன் — மே/பா என். சுப்பிரமணியம், வல்லிமனை, மீசாலை தெற்கு.

★ செல்வரதி பாலசுப்பிரமணியம் — கெருடாவில், சாவகச்சேரி.

★ துரையப்பா பாலகிருஷ்ணன் அல்லது சைலஜா சிவராஜா — தவசிக்குளம், மிருசுவில்.

★ பொன்னுத்துரை தவராசலிங்கம் — மே/பா P நாகபூரணம், சின்னமண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

★ A. M. இராசலிங்கம் — மே/பா கந்தசாமி, மீசாலை கிழக்கு.

★ நொயிலீன் அனீற்றா பொன்கலன் அல்லது மேரி மார்க்கிரட் பொன்கலன் — 41, கச்சாய் வீதி, சாவகச்சேரி

★ சண்முகம் உருக்குமணி— சேச்லேன், சாவகச்சேரி.

★ செல்வராஜா கஜானந்தன் — அல்லாரை தெற்கு, மீசாலை.

★ கிருஷ்ணன் சந்திரன் — மே/பா M. நாகராஜா, தரணியா ஒழுங்கை, வரணி.

★ சீதா செல்லையா அல்லது வாசுகி செல்வராசா — இலட்சுமி இல்லம், வெள்ளம் போக்கடி, கொடிகாமம்.

★ சின்னராசா அந்தோனிப்பிள்ளை — மே/பா பி. மரியநாயகம், இல. 6, பண்ணிதா மகளிர் குடியேற்றம், மிருசுவில்.

★ புஸ்பராணி தவராஜசிங்கம் — மே/பா பாடகாலிங்கம், தபால் நிலைய வீதி, சாவகச்சேரி. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமணி அத்துலத்முதலி விட்டுக்கொடுக்க மறுப்பு

## அரசியலில் பிளவு ஏற்படலாம்

அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தின் மூலம் ஒற்றையாட்சி முறையை பிராந்திய சபை ஆட்சி முறைக்கு மாற்றுவதனைத் தாம் எச்சந்தர்ப்பத்திலும் ஆதரிக்கப்போவதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் திருமதி ஸ்ரீமணி அத்துலத்முதலி விடாப்பிடியாக நிற்கிறார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தீர்வுத்திட்டத்தில் ஒருமித்த கருத்துடையனவாக இருக்க வேண்டும் என்றும் —

ஒற்றையாட்சி முறையையே தொடரவேண்டும் என்ற நிலைப்பாட்டை மாற்றுமாறும் — அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அமைச்சர் ஸ்ரீமணியிடம் வினயமாகக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஒற்றையாட்சி முறையை நீக்கும் எந்தத்திட்டத்தையும் தாம் ஆதரிக்கப் போவதில்லை என்று ஸ்ரீமணி கூறிவிட்டார்.

அரசின் தீர்வுத்திட்டத்தை ஆராய்வதற்காகவும் ஏகமனதான முடிவுக்கு வருவதற்காகவும் கடந்த வெள்ளிக்கிழமை அங்கத்துவக் கட்சிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே அமைச்சர் ஸ்ரீமணி தீர்வுத் திட்டத்துக்குத் தனது எதிர்ப்பை வலியுறுத்தினார். தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நின்றார்.

இதனால் தீர்வுத் திட்டம் குறித்து அரசாங்கத்தில் பெரும் பிளவு ஏற்படும் என்று அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர். (அ)

---

படையினர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு ஞான தீபம் சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள காணியில் வீழ்ந்தது எனினும் அது வெடிக்கவில்லை.

ஷெல் வீச்சு இடம் பெற்ற போது படையினர் பரா வெளிச்சமும் பாய்ச்சினர்.

அதேசமயம் தொண்டமானாறு பகுதியை நோக்கியும் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர். (இ-15-13-31)

---

# மரண அறிவித்தல்கள்

## குமாரசுவாமி சின்னப்பிள்ளை

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும், தற்போது மடத்தடி வீதி கொடிகாமத்தை றெசானி வீதி) வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை நேற்று காலமானார்.

அன்னார் குமாரசாமியின் அன்பு மனைவியும், கமலா (கனடா), கனகசபாபதி (கொழும்பு கதிரேசர் வீதி, வர்த்தகர்), தில்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவம் (கனடா), நகுலராணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், நீகன் (கனடா), அஜந்தன் (கனடா), தீபா, பிரதீபன் (கனடா), நியூகா, கௌசிகன் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-3-96) அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பி· பகல் 4. மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொடிகாமம் வேவில்காடு மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. குமாரசாமி
(கணவன்)

சி. குமாரசாமி,
மே/ பா. G. S. சிறிதரன் ஆசிரியர்,
மடத்தடி வீதி,
கொடிகாமம்,

((40975)

## வேலுப்பிள்ளை இரத்தினம்

தனங்கிளப்பு சாவகச்சேரியை சேர்ந்த வேலுப்பிள்ளை இரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - பண்டிதர்) நேற்று (4-3-96) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை பி. ப. 1 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. ஆர் ஜெகராசா (மகன்)
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

(40976)

## கபிரியேல் சூசை

இளவாலை சென். யூட்சைப் பிறப்பிடமாகவும், தற்போது ஆனந் குடியிருப்பு அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் சூசை நேற்று (4.3.96) இல் காலமானார்.

இவர் யக்கோவாவின் அன்புக் கணவரும், மலர், பற்றிமா, அல்போன்ஸ், சேவியர், வண. பிதா அன்ரன் ஜோர்ச் (பங்குத் தந்தை, ஒட்டுசுட்டான்), ராஜம், ஜெபநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியநாயகம் செல்லையா, சேவியர், யசோதா, பூபதி, ஆனந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பேபி, தர்ஷன், சுபோ, அமல், விமல், நிமல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மரியநாயகம் செல்லையா

(40974)

---

# அரசாங்கத்தின் மீது ஐ.தே.க. நம்பிக்கை இல்லாப் பிரேரணை

கொழும்பு, மார்ச் 5

அரசாங்கத்தின் மீது ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு இன்று கூடும் போது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது குறித்து இறுதி முடிவு செய்யப்படும்.

புத்தளம் சிமெந்து நிறுவனத்தின் பங்குகள் குறித்து அமைச்சரவை செய்த முடிவினை மாற்றி அமைப்பதற்காக —

அமைச்சர் ஒருவருக்கு 2 கோடி ரூபாவும், அரச உயர் அதிகாரி ஒருவருக்கு ஒரு கோடி ரூபாவும் லஞ்சம் வழங்கப்பட்டதாக —

அமைச்சர் கதிர்காமர் குற்றம் சுமத்திய விவகாரத்தை — அடிப்படையாக வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி தனது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளது.

இதே வேளை இந்த விவகாரம் குறித்து பூரண விசாரணை ஒன்றை நடத்துமாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்திடம் கேட்டுள்ளார். (அ)

## இனம் தெரியாத சடலம்

தென்மராட்சி, மார்ச் 5

நேற்று முன்தினம் பகல் கிளாலி இறங்குதுறைக்கு அருகில் மயங்கி விழ்ந்து மரணமானதாகக் கூறப்படும் 50 வயது மதிக்கத்தக்க நபரின் சடலம் கிளாலி காவல் துறையினரால் பளை ஆஸ்பத்திரி சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

நீலம், மண்நிறம் கலந்த கோடிட்ட சாரமும், வெள்ளை பெனியனும் அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கிளாலி காவல் பணிமனைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கிழக்கில் தொடர்வது 'ரிவி கரண'

கொழும்பு, மார்ச் 5

கிழக்கில் காட்டுப் பகுதியில் ''ரிவி கரண'' (சூரிய ஒளிக் கற்றை) இராணுவ நடவடிக்கையை படையினர் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

செங்கலடி — பதுளை வீதியில் கடந்த வெள்ளியன்று படையினர் ராணுவ நடவடிக்கையை ஆரமபித்திருப்பது தெரிந்ததே.

இதற்கிடையில் இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக 5 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(மற்றும் ஒரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## வன்னியில் வரட்சியால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 5

வன்னிப் பகுதியில் 59 ஆயிரத்து 811 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப் படவுள்ளதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட 2 லட்சத்து 48 ஆயிரத்து 147 பேர் இதன் மூலம் நன்மையடைவர்.

வவுனியா மாவட்டத்தில் 19 ஆயிரத்து 66 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 ஆயிரத்து 267 குடும்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 20 ஆயிரத்து 689 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 689 குடும்பங்களும் வரட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

---

முகத்துவாரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

ஆனால் அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக முகத்துவாரம் பகுதி தேவாலய குருமார்கள் இருவரின் வாக்குமூலங்களை பொலிஸார் பதிவு செய்துள்ளனர். (இ-3)

# களனி பாலத்தை தகர்க்க திட்டமிடப்படுகிறதாம்!

## பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 5

களனிப் பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்படலாம் என்ற அச்சத்தில் —

அந்தப் பாலத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

கொழும்பு நகரையும் நாட்டின் பலபகுதிகளையும் இணைக்கும் களனிப் பாலத்தைத்தகர்ப்பதற்காக —

விடுதலைப் புலிகளைச்சேர்ந்த பதினொரு பேர் கொண்ட குழுவொன்று களனிப் பகுதிக்கு வந்திருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே அப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாலத்தைச் சூழவுள்ள பகுதிகளில் படையினர் மிகக் கண்காணிப்புடன் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (அ)

# தற்காலிக முகாமில் 1,700 பேர் தடுத்து வைப்பு

வவுனியா, மார்ச் 5

வடக்கில் இருந்து தெற்கே செல்வதற்காக வவுனியா சென்ற ஆயிரத்து 700 பேர் தற்காலிக முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா அரச அதிபருடன் இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜெயக்கொடி தாண்டிக்குளம், சாந்தசோலை, வேப்பங்குளம் பிறவுண் கம்பனி, ரயில் நிலைய முகாம் ஆகியவற்றுக்கு சென்று அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடினர்.

மறு அறிவித்தல் வரை வவுனியா நகருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயணிகளை அனுமதிப்பது என்றும் —

நோயாளர்கள், அவசர விடயங்களுக்கு வரும் அரச அலுவலர்களை மட்டுமே நொச்சிமோட்டை ஊடாக வவுனியாவுக்குள் அனுமதிப்பது என்றும் — அந்த விஜயத்தின் பின் முடிவானதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேவையற்ற ஆவணங்களைக் கேட்டே படையினர் இவர்களைத் தடுத்து வைத்திருக்கின்றனராம். (இ-3)

## யப்பானிய மாநாடு கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 5

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக யப்பானில் நடைபெறவிருந்த உயர்மட்ட மாநாடு கைவிடப்பட்டுள்ளது.

யப்பானில் இயங்கும் 'சிங்கள—பௌத்த பவுண்டேசன்' என்னும் சிங்கள அடிப்படைவாதிகளின் நிறுவனம் எழுப்பிய ஆட்சேபனையை அடுத்தே மாநாடு கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

---

தீர்வுத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரய்ச்சி ''சந்தேசிய'' வுக்குத் தெரிவித்தார்.

இதே வேளை, தீர்வுத் திட்டத்தை அகில இலங்கை பௌத்த குருமார் சங்கம் ஆதரிப்பதாக அரசாங்கம் நேற்று அடிக்கடி வானொலிச் செய்தி மூலம் பிரசாரம் செய்தது. (அ-6)

## சிப்பாய் தடுத்து வைப்பு

கொழும்பு, மார்ச் 6

திருகோணமலை கன்னியா கல்லுடைக்கும் தொழிற்சாலைக்கு அண்மையில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக கடந்த சனியன்று அடையாள அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது.

இந்த அடையாள அணிவகுப்பின் போது இராணுவ சிப்பாய் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். (இ-ரி)

---

ஜி. சீ ஈ. மற்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோரை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்கும்படி யாழ். அரச அதிபரையும், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களையும் வற்புறுத்துவது.

★ பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை களைவதற்கு இயன்ற சகல முன் முயற்சிகளையும் எடுப்பது.

அண்மையில் நடைபெற்ற ஆசிரிய தெரிவுப் போட்டிப் பரீட்சைகளுக்கான பரீட்சை மண்டபங்களை வன்னி மற்றும் குடாநாட்டில் ஒதுக்கிக் கொடுப்பதிலேயே பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந் நிலையில் அதிலும் விட பலமடங்கு பரீட்சார்த்திகள் தோற்றும் ஜி. சீ. ஈ. (சாதாரண தரம்) பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளை நடத்துவதற்கு பரீட்சை மண்டபங்களை ஒதுக்குவதில் எதிர்கொள்ளக் கூடிய பாரிய நெருக்கடி குறித்து கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

பரீட்சை நடத்துவதற்கான பரீட்சை மண்டபங்களை ஒழுங்கு செய்வதற்கு வசதியாக பாடசாலைகளில் தங்கியிருப்போரை வேறு இடங்களில் குடியமர்த்துவது அவசியம் என்று கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 05-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org